## பிரார்த்தனை நேரம்

# ஜெப அற்புதங்கள்



# முழங்கால் யுத்தம்

தேவ ஊழியர் L. ஜோசப்

# முழங்கால் யுத்தம்

# பிரார்த்தனை நேரம்
# (இயேசுவின் அற்புதங்கள்)



இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே
பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும்,
அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே
அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்
(அப் 2:22)

தேவ ஊழியர். L. ஜோசப்

# உங்களோடு...

ஜெபத்தைக் கேட்கிறவரே...

(சங் 65:2)

**நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் உன்னத திருநாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்...!**

தேவனுடைய பெரிதான கிருபையால் முழங்கால் யுத்தம் - பிரார்த்தனை நேரம் (இயேசுவின் அற்புதங்கள்) என்கிற இந்த ஜெபக்கையேட்டை வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தில் மாம்சத்தில் வாழ்ந்த நாட்களில் அவர் செய்த அற்புதங்களை மையமாக வைத்து ஜெபிக்கும்படியாக இதனை ஆயத்தப் படுத்தியுள்ளோம். இந்தக் கையேடு புதிதாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் தங்கள் தனிப்பட்ட மற்றும் குடும்ப வாழ்க்கையில் இயேசு கிறிஸ்துவிடமிருந்து அற்புதங்களை பெற்றுக்கொள்ள மிகவும் உதவியாக இருக்கும்.

தங்கள் வாழ்க்கையின் கடினமான சூழ்நிலைகளில், குறைவுபட்ட நேரங்களில், தேவைகளின் மத்தியில், வறுமை சூழ்நிலைகளில், வியாதிப்படுக்கையில் மற்றும் பல்வேறு பிரச்சனைகளில் இயேசுகிறிஸ்துவை நோக்கிப் பிரார்த்தனை செய்து, அற்புதங்களைப் பெற்றுக்கொள்ள சில மாதிரி ஜெபங்களை இதில் கொடுத்துள்ளோம்.

இந்தக் கையேட்டினை நீங்கள் விவாசத்தோடு வாசித்து இயேசு கிறிஸ்துவிடம் கண்ணீரோடு, பெருமூச்சோடு, ஏக்கத்தோடு உங்கள் இருதயத்தை ஊற்றி பிரார்த்தனை செய்யுங்கள். அப்பொழுது உங்கள் வாழ்வில் அற்புதங்களையும், அடையாளங்களையும் காண்பீர்கள். சமாதானத்தையும், சந்தோஷத்தையும் பெற்றுக்கொள்வீர்கள்.

**இயேசுகிறிஸ்து உங்கள் பிரார்த்தனையைக் கேட்டு நிச்சயமாய் அற்புதம் செய்து ஆசீர்வதிப்பாராக.**

அன்பும் ஜெபமும்

L. ஜோசப்

ஜெபத்தை ஏற்றுக்கொள்பவரே... (சங் 6:9)

# இக்கையேட்டின்
# உள்ளே...


**1. தேவனை ஸ்தோத்திரிப்போம் ... 06**

**2. அற்புதங்கள் [மாதிரி ஜெபங்கள்]**

1. சித்தமுண்டு சுத்தமாகு ... 08
2. ஒரு வார்த்தை சொல்லும் ... 10
3. இயேசு குணமாக்கினார் ... 13
4. மிகுந்த அமைதி உண்டாயிற்று ... 15
5. இந்த மனுஷனை விட்டுப் போ ... 17
6. பாவங்கள் மன்னிக்கப்பட்டது ... 21
7. அழாதேயுங்கள் ... 24
8. விசுவாசம் உன்னை இரட்சித்தது... 27
9. எங்களுக்கு இரங்கும் ... 30

10. நீங்கள் விசேஷித்தவர்கள் ... 32

11. ஆண்டவரே உதவிசெய்யும் ... 34

12. திடன்கொள் எழுந்திரு ... 37

13. இவனைவிட்டு புறப்பட்டுப் போ ... 40

14. தொடும்படி வேண்டினர் ... 42

15. மனதுருகும் இயேசு ... 44

16. பெலவீனத்திலிருந்து விடுதலை ... 47

17. குணமாக்குகிற இயேசு ... 49

18. உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்... 52



# தேவனை ஸ்தோத்திரிப்போம்

ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப் படுத்துகிறான் (சங் 50:23)

- ★ அதிசயங்களைச் செய்யும் பிதாவே!
- ★ அற்புதங்களைச் செய்யும் இயேசுவே!
- ★ வல்லமையின் ஆவியானவரே!
- ★ அதிசயங்களைக் காணப்பண்ணுகிறவரே!
- ★ நீதியின் பலனை அருளிச்செய்பவரே!
- ★ கிருபையும் சத்தியமும் நிறைந்தவரே!
- ★ ஜீவத்தண்ணீரின் ஊற்றானவரே!
- ★ ஒரே தேவனாயிருக்கிற கர்த்தரே!
- ★ சகலத்தையும் புதிதாக்குகிறவரே!
- ★ ஜாதிகளுக்கு ஒளியானவரே!
- ★ வெளிச்சமும், இரட்சிப்புமானவரே!
- ★ எனக்காக சிலுவை சுமந்தவரே!
- ★ சர்வலோக நியாயாதிபதியே!

★ பாவிகளை நேசிக்கிறவரே!

★ காலைதோறும் விசாரிக்கிறவரே!

★ நிமிஷந்தோறும் சோதித்தறிகிறவரே!

★ மண்ணுயிரைக் காப்பவரே!

★ உத்தமர்களை வெறுக்காதவரே!

★ இருதயத்தில் ஞானமுள்ளவரே!

★ பெலத்தில் பராக்கிரமமுள்ளவரே!

★ சத்திய வசனத்தினால் ஜநிப்பித்தவரே!

★ சத்துருக்களுக்குப் பதிலளிக்கிறவரே!

★ பரிசுத்த பர்வதமானவரே!

★ மீட்பரும், வல்லவருமானவரே!

★ பூமியின் ரூபத்தை புதிதாக்குகிறவரே!

★ அக்கினி மயமான நிறமுடையவரே!

★ மகிமையின் சாயலையுடையவரே!

★ சீர்கேடுகளைக் குணமாக்குகிறவரே!

கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படுவதாக

(சங் 113:2)

# 1

# சித்தமுண்டு சுத்தமாகு

இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார் (மாற் 1:40-44)

★ அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் அவரிடத்தில் வந்து, அவர் முன்பாக முழங்கால்படியிட்டு: உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்று வேண்டிக் கொண்டான்.

★ இயேசு மனதுருகி, கையை நீட்டி, அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார்.

★ இப்படி அவர் சொன்னவுடனே, குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று, அவன் சுத்தமானான்.

★ அப்பொழுது அவர் அவனை நோக்கி: நீ இதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு எச்சரிக்கையாயிரு

★ ஆயினும் நீ போய், ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து, நீ சுத்தமானதினிமித்தம், மோசே கட்டளையிட்டிருக்கிறவைகளை அவர்களுக்குச் சாட்சியாகச் செலுத்து என்று கண்டிப்பாய்ச் சொல்லி, உடனே அவனை அனுப்பிவிட்டார்.

## ஜெபம்

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, என் ஆவி, ஆத்துமா, சரீரத்தை உமது பரிசுத்த முள்ள கரங்களில் ஒப்புவிக்கிறேன்! என் வாழ்வில் குஷ்ட ரோகம் போன்று காணப்படும் என்னுடைய எல்லா கொடிய பாவங்களையும் மன்னித்தருளும்படி ஜெபிக்கிறேன்! இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் என்ற வார்த்தையின்படி என்னை உமது பரிசுத்த இரத்தத் தினால் கழுவி பரிசுத்தமாக்கியருளும்! இயேசுவே, உமது சித்தத்தின்படி பரிசுத்தமாய் வாழ்கிற கிருபை யையும், பெலனையும் தந்து ஆசீர்வதித்தருளும். மறுபடியும் எந்தவொரு பாவத்திலும் சிக்கிக் கொள் ளாமல், பாவத்தின்மேல் ஜெயமெடுக்க எனக்குக் கிருபை தந்தருளும்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். பரமபிதாவே! ஆமென்.**

# 2.

# ஒரு வார்த்தை சொல்லும்

ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்
(மத் 8:5-13)

★ இயேசு கப்பர்நகூமில் பிரவேசித்தபோது, நூற்றுக்கு அதிபதி ஒருவன் அவரிடத்தில் வந்து:

★ ஆண்டவரே, என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகிறான் என்று அவரை வேண்டிக்கொண்டான்.

★ அதற்கு இயேசு: நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன் என்றார்.

★ நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்.

★ நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு;

நான் ஒருவனைப் போவென்றால் போகிறான். மாற்றொருவனை வாவென்றால் வருகிறான், என் வேலைக்காரனை, இதைச் செய்யென்றால் செய் கிறான் என்றான்.

★ இயேசு இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, தமக்குப் பின்செல்லுகிறவர்களை நோக்கி: இஸ்ரவேல ருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத் தைக் காணவில்லை என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

★ அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள்... என்றார்.

★ பின்பு இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி: நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான்.

அவர் (இயேசு) தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார் (சங் 107:20)

# ஜெபம்

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே என்னை உமது கிருபையுள்ள கரங்களில் ஒப்ப வித்து ஜெபிக்கிறேன்! என் வாழ்வில் மிகவும் இக் கட்டான இந்தக் குறிப்பிட்ட சூழ்நிலையில் என்ன செய்வதென்று தெரியாமல் கலங்கித் தவிக்கிற என்மேல் கிருபையாய் மனமிரங்கும்! ஒரே ஒரு வார்த்தையின் மூலம் அற்புதம் செய்த இயேசுவே, என் வாழ்விலும் கண்ணீரோடு காணப் படும் என்னை உமது வல்லமையுள்ள வார்த்தை யால் ஆறுதல்படுத்தும்படி ஜெபிக்கிறேன்! என் கண்ணீரைத் துடைத்தருளும்! சூழ்நிலையை மாற்றியருளும்! என் வாழ்வை செழிப்பாக்கும்! சந்தோஷத்தினால் நிரப்பி என்னை ஆசீர்வதித் தருளும்! ஆண்டவரே. உம்முடைய வசனத்தை, வார்த்தையை அனுப்பி என்னை குணமாக்கு வதற்காக, ஆசீர்வதிப்பதற்காக, உமக்கு நன்றி!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். கிருபையுள்ள பிதாவே! ஆமென்.**

# 3

# இயேசு குணமாக்கினார்

பலவிதமான வியாதிகளினால் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை அவர் சொஸ்தமாக்கி, அநேகம் பிசாசுகளையும் துரத்தி விட்டார் (மாற் 1:32-34)

- சாயங்காலமாகிச் சூரியன் அஸ்தமித்தபோது, சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும், அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்.
- பட்டணத்தார் எல்லாரும் வீட்டு வாசலுக்கு முன்பாகக் கூடிவந்தார்கள்.
- பலவிதமான வியாதிகளினால் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை அவர் சொஸ்தமாக்கி, அநேகம் பிசாசுகளையும் துரத்திவிட்டார்; அந்தப் பிசாசுகள் தம்மை அறிந்திருந்தபடியால், அவைகள் பேசுகிறதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை.

அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப்போடுவீர் (சங் 1:3)

## ஜெபம்

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!**

பரிகாரியாகிய என் தேவனே, என்னை உமது மகிமையுள்ள கரங்களில் அர்ப்பணிக்கிறேன்! சகல வியாதிகளையும் குணமாக்கும் இயேசுவே, வியாதியினாலும், பிசாசின் வல்லமையினாலும் போராட்டத்தோடு வாழ்ந்துகொண்டிருக்கும் என்னை குணமாக்கி விடுவிக்கும்படி ஜெபிக்கிறேன்! வியாதியோடு உம்மிடத்தில் வந்தவர்களை சுகமாக்கி, விடுதலை தந்த இயேசுவே, பெலவீனத்தோடு, போராட்டத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கும் என்னை உம்முடைய தழும்புகளால் தொட்டு குணமாக்கியருளும். விடுதலையைத் தந்தருளும்! பிசாசின் போராட்டங்கள் விலகட்டும்! இயேசுவே, உம்முடைய சமாதானத்தினால், சந்தோஷத்தினால் என்னை நிரப்பியருளும்! உம்முடைய பரிசுத்த இரத்தத்தில் என்னை மறைத்துக்கொள்ளும்! உமது குணமாக்கும் வல்லமையினால் என் சுக வாழ்வைத் துளிர்க்கப்பண்ணியருளும்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். வல்லமையுள்ள பிதாவே, ஆமென்.**

# 4

# மிகுந்த அமைதல் உண்டாயிற்று

காற்றையும் கடலையும் அதட்டினார்.
உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று
(மத் 8:23-26)

★ அவர் படவில் ஏறினபோது அவருடைய சீஷர்கள் அவருக்குப் பின்சென்று ஏறினார்கள்.

★ அப்பொழுது படவு அலைகளினால் மூடப்படத் தக்கதாய்க் கடலில் பெருங்காற்று உண்டாயிற்று. அவரோ நித்திரையாயிருந்தார்.

★ அப்பொழுது, அவருடைய சீஷர்கள் வந்து, அவரை எழுப்பி: ஆண்டவரே! எங்களை இரட்சியும், மடிந்துபோகிறோம் என்றார்கள்.

★ அதற்கு அவர்: அற்பவிசுவாசிகளே! ஏன் பயப் படுகிறீர்கள் என்று சொல்லி; எழுந்து, காற் றையும் கடலையும் அதட்டினார், உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று.

★ அந்த மனுஷர்கள் ஆச்சரியப்பட்டு: இவர் எப்படிப் பட்டவரோ, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப் படிகிறதே என்றார்கள்.

# ஜெயம்

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!**

சிருஷ்டி கர்த்தராகிய தேவனே, என்னை உமது இரக்கமுள்ள கரங்களில் அர்ப்பணிக்கிறேன்! என் வாழ்க்கையில் சமுத்திர அலைகளைப்போல் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளால் சமாதானத்தை இழந்து உம்மை நோக்கி கதறுகிறேன்! என் வாழ்வில் புயலைப்போன்று சீறி வரும் பலவித பிரச்சினை களால் அலைக்கழிக்கப்பட்டு கலங்கி நிற்கிற என்மேல் இரக்கமாயிரும்! காற்றையும், கடலையும், அமைதிப்படுத்தின இயேசுவே, கண்ணீரோடு, வேதனையோடு, உபத்திரவத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கும் என் வாழ்வில் அமைதி, நிம்மதி, சமாதானம், இளைப்பாறுதல் உண்டாகும்படி கிருபை செய்தருளும்! எனக்கு நேரிடும் எல்லா போராட்டங்களிலும் ஜெயமெடுக்க நீர் உதவி செய்வதற்காக உமக்கு நன்றி! ஆண்டவரே, நீர் என் ஜெபத்தைக் கேட்டதற்காக ஸ்தோத்திரம்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! அன்பு நிறைந்த பிதாவே! ஆமென்.**

# 5

# இந்த மனிதனை விட்டுப் போ

அசுத்த ஆவியே, இந்த மனுஷனை விட்டுப் புறப்பட்டுப்போ ( மாற் 5:1-15)

★ பின்பு அவர்கள் கடலுக்கு அக்கரையிலுள்ள கதரேனருடைய நாட்டில் வந்தார்கள்.

★ அவர்கள் படவிலிருந்து இறங்கினவுடனே, அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் பிரேதக் கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான்.

★ அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது ; அவனைச் சங்கிலிகளினாலும் கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது.

★ அவன் அநேகந்தரம் விலங்குகளினாலும் சங்கிலிகளினாலும் கட்டப்பட்டிருந்தும், சங்கிலிகளை முறித்து, விலங்குகளைத் தகர்த்துப்போடுவான் ; அவனையடக்க ஒருவனாலும் கூடாதிருந்தது.

★ அவன் எப்பொழுதும் இரவும், பகலும், மலைகளிலும் கல்லறைகளிலும் இருந்து, கூக்

குரலிட்டு, கல்லுகளினாலே தன்னைக் காயப் படுத்திக்கொண்டிருந்தான். அவன் இயேசுவை தூரத்திலே கண்டபோது, ஓடிவந்து, அவரைப் பணிந்து கொண்டு:

★ இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப் படுத்தாதபடிக்குத் தேவன் பேரில் உமக்கு ஆணையென்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். ஏனெனில், அவர் அவனை நோக்கி: அசுத்த ஆவியே, இந்த மனுஷனை விட்டுப் புறப் பட்டுப் போ என்று சொல்லியிருந்தார்.

★ அப்பொழுது, அவர் அவனை நோக்கி: உன் பேர் என்னவென்று கேட்டார். அதற்கு அவன்: நாங்கள் அநேகராயிருக்கிறபடியால் என் பேர் லேகியோன் என்று சொல்லி,

★ தங்களை அந்தத் திசையிலிருந்து துரத்தி விடாதபடிக்கு அவரை மிகவும் வேண்டிக் கொண்டான். அப்பொழுது, அவ்விடத்தில் மலையருகே அநேகம் பன்றிகள் கூட்டமாக மேய்ந்துகொண்டிருந்தது.

★ அந்தப் பிசாசுகளெல்லாம் அவரை நோக்கி: பன்றிகளுள்ளே போகும்படி, அவைகளுக்

குள்ளே எங்களை அனுப்பும் என்று அவரை வேண்டிக்கொண்டன.

★ இயேசு அவைகளுக்கு உத்தரவு கொடுத்தவுடனே, அசுத்த ஆவிகள் புறப்பட்டுப் பன்றிகளுக்குள் போயின; உடனே ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகளுள்ள அந்தக் கூட்டம் உயர்ந்த மேட்டிலிருந்து ஓடி, கடலிலே பாய்ந்து, கடலில் அமிழ்ந்து மாண்டது.

★ பன்றிகளை மேய்த்தவர்கள் ஓடி, இதைப் பட்டணத்திலும் சுற்றுப்புறங்களிலும் அறிவித்தார்கள். அப்பொழுது சம்பவித்ததைப் பார்க்கும்படி ஜனங்கள் புறப்பட்டு;

★ இயேசுவினிடத்தில் வந்து, லேகியோனாகிய பிசாசுகள் பிடித்திருந்தவன் வஸ்திரந்தரித்து, உட்கார்ந்து, புத்திதெளிந்திருக்கிறதைக் கண்டு, பயந்தார்கள்.

பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே
தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்
(I யோவா 3:8)

## ஜெபம்

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!**

சிலுவையில் வெற்றி சிறந்த இயேசுவே, என்னை உமது இரக்கமுள்ள கரங்களில் ஒப்புக் கொடுத்து ஜெபிக்கிறேன்! பிசாசின் வல்லமையினால் பாதிக்கப்பட்டு பலவித துன்பங்களை அனுவிக்கும் என்னை நீர் விடுதலையாக்குபடி ஜெபிக்கிறேன்! தேவனே, தினமும் பயத்தோடும், நடுக்கத்தோடும், போராட்டத்தோடும் வாழ்ந்து வரும் இந்த சூழ்நிலையை மாற்றியருளும்! என் கண்ணீரைத் துடைத்து இருள் நிறைந்த என் வாழ்க்கையை வெளிச்சம் நிறைந்ததாக மாற்றியருளும்! இயேசுகிறிஸ்து விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவார்கள் என்ற வார்த்தையின்படி என்னை விடுவித்தருளும்! என்னைக் கசக்கிப் பிழிகிற பொல்லாத பிசாசின் வல்லமைகள் என்னை விட்டு விலகிப் போகட்டும்! பயங்கள் நீங்கட்டும். புது வாழ்வு மலரட்டும்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் அன்பின் பரலோக பிதாவே! ஆமென்.**

# 6

# பாவங்கள் மன்னிக்கப்பட்டது

மனுஷனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது (லூக் 5:18-25)

★ அப்பொழுது சில மனுஷர் திமிர்வாதக்காரன் ஒருவனைப் படுக்கையோடே எடுத்துக் கொண்டு வந்து, அவனை உள்ளே கொண்டு போகவும் அவர் முன்பாக வைக்கவும் வகை தேடினார்கள்.

★ ஜனக்கூட்டம் மிகுதியாயிருந்தபடியால் அவனை உள்ளே கொண்டுபோகிறதற்கு வகைகாணாமல், வீட்டின்மேல் ஏறி, தட்டோடுகள் வழியாய் ஜனங் களின் மத்தியில் இயேசுவுக்கு முன்பாக அவனைப் படுக்கையோடே இறக்கினார்கள்.

★ அவர்களுடைய விசுவாசத்தை அவர் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மனுஷனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்.

★ அப்பொழுது வேதபாரகரும் பரிசேயரும் யோசனைபண்ணி, தேவதூஷணம் சொல்லுகிற இவன் யார்? தேவன் ஒருவரேயன்றிப் பாவங் களை மன்னிக்கத்தக்கவர் யார் என்றார்கள்.

★ இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி: உங்கள் இருதயங்களில் நீங்கள் சிந்திக்கிறதென்ன?

★ உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல் வதோ, எது எளிது?

★ பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமார னுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டுமென்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு, உன் வீட்டுக்குப்போ என்று உனக்கு சொல்லுகிறேன் என்றார்.

★ உடனே அவன் அவர்களுக்கு முன்பாக எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, தேவனை மகிமைப்படுத்தி, தன் வீட்டுக்குப் போனான்.

# ஜெபம்

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!**

பரிசுத்த தேவனே, என்னை உமது கிருபையுள்ள கரங்களில் ஒப்புவிக்கிறேன்! நான் செய்த பாவ செயல்களினால் இப்பொழுது சமாதானத்தை இழந்து கண்ணீரோடு வாழும் என்னை மன்னித்தருளும்! இயேசுவே, என்னிடம் காணப்படும் கொடிய பாவங்கள், அருவருப்புகள், அசுத்தங்கள் என்னை விட்டு விலக உதவி செய்தருளும்! இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் என்ற உம்முடைய வார்த்தையின்படி இயேசுவே உமது இரத்தத்தினால் என்னைக் கழுவி என் பாவங்களையெல்லாம் நீக்கியருளும்! பாவ பழக்க வழக்கங்களிலிருந்து எனக்கு விடுதலை தந்தருளும்! என்னைப் பரிசுத்தப்படுத்தியருளும்! இனி நான் பாவஞ்செய்யாதபடிக்கு பரிசுத்தமாய் வாழ உதவி செய்தருளும்! பாவத்தினால் உண்டான சாபங்களை நீக்கியருளும்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே! ஆமென்.**

# 7

# அழாதேயுங்கள்

எல்லாரும் அழுது அவளைக் குறித்துத் துக்கங் கொண்டாடுகிறதைக் கண்டு: அழாதேயுங்கள், அவள் மரித்துப்போகவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார் (லூக் 8:41,42,49-56)

★ அப்பொழுது ஜெப ஆலயத்தலைவனாகிய யவீரு என்னும் பேருள்ள ஒருவன் வந்து, இயேசுவின் பாதத்தில் விழுந்து, பன்னிரண்டு வயதுள்ள தன்னுடைய ஒரே குமாரத்தி மரண அவஸ்தை யாயிருந்தபடியால்,

★ தன் வீட்டிற்கு வரும்படி அவரை வேண்டிக் கொண்டான். அவர் போகையில் திரளான ஜனங்கள் அவரை நெருக்கினார்கள்.

★ ஜெப ஆலயத் தலைவனுடைய வீட்டிலிருந்து ஒருவன் வந்து, அவனை நோக்கி: உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள், போதகரை வருத்தப்படுத்த வேண்டாம் என்றான்.

★ இயேசு அதைக் கேட்டு: பயப்படாதே; விசுவாசமுள்ளவனாயிரு, அப்பொழுதுஅவள் இரட்சிக்கப்படுவாள் என்றார்.

★ அவர் வீட்டில் வந்தபோது, பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் பெண்ணின் தகப்பனையும் தாயையும் தவிர வேறொருவரையும் உள்ளே வரவொட்டாமல்,

★ எல்லாரும் அழுது அவளைக் குறித்துத் துக்கங் கொண்டாடுகிறதைக் கண்டு: அழாதேயுங்கள், அவள் மரித்துப்போகவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார். அவள் மரித்துப்போனாளென்று அவர்கள் அறிந்ததினால், அவரைப் பார்த்து நகைத்தார்கள்.

★ எல்லாரையும் அவர் வெளியே போகப் பண்ணி, அவளுடைய கையைப் பிடித்து: பிள்ளையே எழுந்திரு என்றார்.

★ அப்பொழுது அவள் உயிர் திரும்ப வந்தது; உடனே அவள் எழுந்திருந்தாள்; அவளுக்கு ஆகாரங்கொடுக்கக் கட்டளையிட்டார். அவள் தாய்தகப்பன்மார் ஆச்சரியப்பட்டார்கள்.

அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் (கொலோ 1:18)

# ஜெபம்

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!**

மனதுருக்கமுள்ள தேவனே, என்னை உமது திருக்கரங்களில் அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! எனது வாழ்வில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளால் வேதனையோடு இருக்கும் என்மேல் கிருபையாய் மனமிரங்கும்! இனி என்ன செய்வதென்று அறியாது மிகவும் கலங்கி கண்ணீரோடு இருக்கும் என் வாழ்வில் அற்புதம் செய்தருளும்! அழாதே என்று சொல்லி தேற்றுகிற இயேசுவே, எப்பொழுதும் அழுது கொண்டிருக்கும் என் இக்கட்டான சூழ்நிலையை மாற்றி தெய்வீக சமாதானத்தினால் நிரப்பியருளும்! சஞ்சலமும், தவிப்பும், துக்கமும், கலக்கமும் மாறிப் போகட்டும். வனாந்தர வாழ்க்கையை செழிப்பாக மாற்றியருளும்! என் கண்ணீரைக் களிப்பாக மாற்றியருளும்! உமது இரட்சிப்பின் சந்தோஷத்தால் நிரப்பியருளும்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். நல்ல பிதாவே! ஆமென்.**

# 8

# விசுவாசம் உன்னை இரட்சித்தது

**அவர் அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார் (லூக் 8:43-48)**

★ அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும் பாடுள்ளவளாயிருந்து, தன் ஆஸ்திகளையெல்லாம் வைத்தியர்களுக்குச் செலவழித்தும், ஒருவனாலும் சொஸ்தமாக்கப்படாதிருந்த ஒரு ஸ்திரீ,

★ அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்; உடனே அவளுடைய பெரும்பாடு நின்றுபோயிற்று.

★ அப்பொழுது இயேசு: என்னைத்தொட்டது யார் என்று கேட்டார். எங்களுக்குத் தெரியாதென்று எல்லாரும் சென்னபோது, பேதுருவும் அவனுடனே கூட இருந்தவர்களும்: ஐயரே, திரளான ஜனங்கள் உம்மைச் சூழ்ந்து நெருக்கிக்கொண்டிருக்கிறார்களே, என்னைத் தொட்டது யார் என்று எப்படிக் கேட்கிறீர் என்றார்கள்.

★ அதற்கு இயேசு: என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்; ஆதலால் ஒருவர் என்னைத் தொட்டதுண்டு என்றார்.

★ அப்பொழுது அந்த ஸ்திரீ தான் மறைந்திருக்க வில்லையென்று கண்டு, நடுங்கிவந்து, அவர் முன்பாக விழுந்து, தான் அவரைத் தொட்ட காரணத்தையும் உடனே தான் சொஸ்மானதையும் எல்லா ஜனங்களுக்கும் முன்பாக அவருக்கு அறிவித்தாள்.

★ அவர் அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமா தானத்தோடே போ என்றார்.

நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக்
காண்பாய் (யோவா 11:40)

என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும்
பிழைப்பான் (யோவா 11:25)

# ஜெபம்

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!**

என் இரட்சிப்பின் தேவனே, என்னை உமது கிருபையுள்ள கரங்களில் அர்ப்பணிக்கிறேன்! என் வாழ்வில் காணப்படும் பல்வேறு பிரச்சினை களால் மிகவும் கலங்கித் தவிக்கும் என்னை தயவாய் நினைத்தருளும். எல்லாராலும் கைவிடப்பட்டு தவித்துக்கொண்டிருக்கும் என்மேல் மனமிரங்கும்! மிகுந்த நெருக்கங்களின் மத்தியில் இயேசுவே, நீரே என்னை பிரச்சினையிலிருந்து விடுவிக்க முடியும் என்று விசுவாசத்தோடு ஜெபிக்கிறேன்! உம்மை நோக்கிப் பார்த்த முகங்களைப் பிரகாசிக் கப்பண்ணும் தேவனே, என் முகத்தைப் பிரகாசிக் கப்பண்ணும்! பிரச்சினைகளைப் பாராமல் உம்மையே நோக்கிப் பார்க்க உதவி செய்தருளும். விசுவா சத்தில் வளர்ந்து பெருகி எனக்கு நேரிடும் எல்லா பிரச்சினைகளையும் மேற்கொண்டு ஜெயமெடுக்க கிருபை செய்தருளும்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். வல்லமையுள்ள பிதாவே! ஆமென்.**

# 9

# எங்களுக்கு இரங்கும்

தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள் (மத் 9:27-30)

★ இயேசு அவ்விடம் விட்டுப் போகையில், இரண்டு குருடர் அவர் பின்னே சென்று: தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள்.

★ அவர் வீட்டிற்கு வந்தபின்பு, அந்தக் குருடர் அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா என்று கேட்டார், அதற்கு அவர்கள்: ஆம் விசுவாசிக் கிறோம், ஆண்டவரே! என்றார்கள்.

★ அப்பொழுது, அவர்களுடைய கண்களை அவர் தொட்டு: உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார்.

★ உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப் பட்டது.

# ஜெபம்

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, என்னை உமது இரக்கமுள்ள கரங்களில் ஒப்புக்கொடுக்கிறேன்! குருடரின் கண்களைத் திறந்தவரே, என் வாழ்க்கையில் காணப்படும் குருட்டு நிலைமைகள் மாறும்படி ஜெபிக்கிறேன்! பாவத்தினால், சாபத்தினால் குருடாக்கப்பட்டுள்ள என் கண்களைத் திறந்தருளும்! தேவனே, என் வாழ்க்கையில் குருடாக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு பகுதியிலும் இருள் மாறி வெளிச்சம் உண்டாகும்படி கிருபை செய்தருளும்! உம்மை அனுதினம் தேடவும், உம் வேதத்தை தியானிக்கவும் அநுக்கிரகம் செய்தருளும்! பிரகாசமுள்ள மனக்கண்களைத் தந்தருளும்! ஆண்டவரே, உம்மை தரிசிக்கும்படிக்கு என் கண்களைத் திறந்தருளும்! என் கண்களைக் குருடாக்கும் சத்துருவின் வல்லமைகள் விலகட்டும்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். வல்லமையுள்ள பிதாவே! ஆமென்.**

# 10

# நீங்கள் விசேஷித்தவர்கள்

ஆட்டைப் பார்க்கிலும் மனுஷனானவன்
விசேஷித்திருக்கிறான் (மத் 12:12)

(மத் 6:25,26)

★ ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப் பார்க் கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?

★ ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரம பிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?

# ஜெபம்

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

தேவனே, என்னை உமது மகிமையுள்ள கரங்களில் அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! என் வாழ்வில் நான் பிரகாசிக்கக் கூடாதபடிக்குக் காணப்படும் தடைகள் விலகட்டும்! என்னை உமது விசேஷித்த கிருபையினாலும், விசேஷித்த ஞானத்தினாலும் நிரப்பி ஆசீர்வதித்தருளும்! இதினிமித்தம் மற்றவர்களுக்கு முன்பாக நான் விசேஷித்தவனாகக் காணப்பட தேவன் அருள் செய்தருளும்! நான் படிக்கிற, வேலை செய்கிற, வாழ்கிற இடத்தில் மற்றவர்கள் என்னை விசேஷித்தவனாகக் காணும்படி எனக்குள் விசேஷித்த அபிஷேகத்தை வைத்தருளும்! ஆண்டவரே, ஞானத்தையும், அறிவையும், புத்தியையும், திறமையையும், யுக்தியையும், சாமர்த்தியத்தையும் கொடுத்து விசேஷித்த ஆசீர்வாதத்தினால் நிரப்பியருளும்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். தயவுள்ள பிதாவே, ஆமென்.**

# 11

# ஆண்டவரே உதவி செய்யும்

ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும் என்று
அவரைப் பணிந்துகொண்டாள்
(மத் 15:21-28)

★ பின்பு, இயேசு அவ்விடம் விட்டு தீரு சீதோன் பட்டணங்களின் திசைகளுக்குப் போனார்.

★ அப்பொழுது, அந்தத் திசைகளில் குடியிருக்கிற கானானிய ஸ்திரீ ஒருத்தி அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்று சொல்லிக் கூப்பிட்டாள்.

★ அவளுக்குப் பிரதியுத்தரமாக அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து: இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக் கொண்டார்கள்.

★ அதற்கு அவர்: காணாமற்போன ஆடு களாகிய இஸ்ரவேல்வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்லவென்றார்.

★ அவள் வந்து: ஆண்டவரே, எனக்கு உதவி செய்யும் என்று அவரைப் பணிந்து கொண்டாள்.

★ அவர் அவளை நோக்கி: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார்.

★ அதற்கு அவள்: மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜை யிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள்.

★ இயேசு அவளுக்குப் பிரதியுத்திரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்.

கூப்பிடுகிற எளியவனையும்,

உதவியற்ற சிறுமையானவனையும்

அவர் விடுவிப்பார் (சங் 72:12)

# ஜெபம்

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

ஆண்டவரே, என்னை உமது இரக்கமுள்ள கரங்களில் அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! என் வாழ்வில் காணப்படும் குறைவுகள், வியாதிகள், பெலவீனங்கள் மற்றும் பிசாசின் போராட்டங்களால் கலங்கித் தவிக்கிற எனக்கு நீர் உதவி செய்தருளும்! எல்லாராலும் கைவிடப்பட்ட என் தனிமை சூழ்நிலையை மாற்ற உம்மால் ஆகும் என்று விசுவாசிக்கிறேன்! இயேசுவே, எனக்கு மனமிரங்கி தயை செய்தருளும்! என் வாழ்க்கைப் பாதையை மாற்றியமைத்து ஆசீர்வதித்தருளும்! குறைவையெல்லாம் நிறைவாக்கும். இயேசுவே, என்னிடம் காணப்படும் எல்லாக் குறைகளையும் நீக்கியருளும்! வியாதிகளை, பெலவீனங்களை நீக்கி சுகத்தையும், பெலனையும், ஆரோக்கியத்தையும் தந்தருளும்! பிசாசின் போராட்டங்களிலிருந்து முற்றிலும் விடுதலையாக்கியருளும்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் பரலோகப் பிதாவே! ஆமென்.**

# 12

# திடன்கொள், எழுந்திரு

குருடனை அழைத்து திடன்கொள், எழுந்திரு,
அவர் (இயேசு) உன்னை அழைக்கிறார்
என்றார்கள் (மாற் 10:46-52)

★ பின்பு அவர்கள் எரிகோவுக்கு வந்தார்கள். அவரும் அவருடைய சீஷர்களும் திரளான ஜனங்களும் எரிகோவை விட்டுப் புறப்படுகிற போது, திமேயுவின் மகனாகிய பர்திமேயு என்கிற ஒரு குருடன், வழியருகே உட்கார்ந்து,பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான்.

★ அவன் நசரேயனாகிய இயேசு வருகிறாரென்று கேள்விப்பட்டு; இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிடத் தொடங்கினான்.

★ அவன் பேசாதிருக்கும்படி அநேகர் அவனை அதட்டி னார்கள். அவனோ: தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான்.

★ இயேசு நின்று, அவனை அழைத்துவரச் சொன்னார். அவர்கள் அந்தக் குருடனை அழைத்து: திடன் கொள், எழுந்திரு, உன்னை அழைக்கிறார் என்றார்கள்.

★ உடனே அவன் தன் மேல்வஸ்திரத்தை எறிந்து விட்டு, எழுந்து, இயேசுவினிடத்தில் வந்தான்.

★ இயேசு அவனை நோக்கி: நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறாய் என்றார். அதற்கு அந்தக் குருடன்: ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும் என்றான்.

★ இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். உடனே அவன் பார்வையடைந்து, வழியிலே இயேசுவுக்குப் பின் சென்றான்.

என் ஆத்துமாவிலே பெலன் தந்து என்னைத் தைரியப்படுத்தினீர் (சங் 138:3)

# ஜெயம்

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

பரிசுத்த தேவனே, என்னை உம்முடைய ஒப்பற்ற கரங்களில் அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! என் வாழ்வில் ஏற்பட்டுள்ள பலவித பிரச்சினைகளால் திடனற்று சோர்வோடும், பெலவீனத்தோடும் இருக்கும் என்மேல் தயவாய் இரங்கியருளும்! எதிர்கால வாழ்வைக் குறித்த நம்பிக்கை இழந்து தவிக்கும் என்னைத் தேற்றியருளும்! ஆண்டவரே, எல்லாராலும் கைவிடப்பட்ட நிலையில் பயத்தோடும், நடுக்கத்தோடும், கலக்கத்தோடும் தைரியமின்றி வாழும் எனக்கு உதவி செய்தருளும்! இயேசுவே, எனக்கு திடநம்பிக்கை தந்து என்னைப் பெலப்படுத்தியருளும்! பிரச்சினைகளை மேற்கொள்வதற்கு மிகுந்த மனவலிமையை தந்தருளும்! என்னை உம்முடைய ஆவியின் பெலத்தினாலும், உற்சாகத்தினாலும் நிரப்பியருளும்! என் எதிர்காலத்தைப் பிரகாசமாக்கி உயர்த்தியருளும்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! கருணையுள்ள பிதாவே!! ஆமென்.**

# 13

# இவனை விட்டுப் புறப்பட்டுப் போ

அதற்கு இயேசு: நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுப்போ என்று அதை அதட்டினார் (மாற் 1:23-27)

★ அவர்களுடைய ஜெபஆலயத்திலே அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் இருந்தான். அவன்: ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று சத்தமிட்டான்.

★ அதற்கு இயேசு: நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுப்போ என்று அதை அதட்டினார். உடனே அந்த அசுத்த ஆவி அவனை அலைக்கழித்து, மிகுந்த சத்தமிட்டு, அவனைவிட்டு போய்விட்டது. எல்லாரும் ஆச்சரியப்பட்டு... அவைகள் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று தங்களுக்குள்ளே ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்.

## ஜெபம்

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

தேவனே, என்னை உமது தயவுள்ள கரங்களில் ஒப்புவித்து ஜெபிக்கிறேன்! என் வாழ்வில் அசுத்த ஆவியின் கிரியைகளுக்கு அறியாமல் இடங்கொடுத்ததினிமித்தம் நிம்மதியையும், சமாதானத்தையும் இழந்து கண்ணீரோடும், போராட்டத்தோடும் வாழ்ந்து வரும் என்னைக் கண்ணோக்கிப் பாரும்! நித்தம்நித்தம் அசுத்தாவியால் அலைக்கழிக்கப்படுகிற என்மேல் உமது வல்லமையை அனுப்பி குணமாக்கியருளும்! இயேசுவே, என் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் காணப்படும் பிசாசின் கிரியைகளை முற்றிலும் அளித்து தெய்வீக சமாதானத்தைத் தந்தருளும்! என்னை அலைக்கழிக்கிற அசுத்த வல்லமைகளை, சாத்தானை ஜெயித்த இயேசுவின் நாமத்தில் விலகும்படி கட்டளையிடுகிறேன்! விடுதலை உண்டாகட்டும்! பயம், கலக்கம் விலகட்டும்! சந்தோஷம், சமாதானம், இளைப்பாறுதல் உண்டாகட்டும்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! இரக்கமுள்ள பிதாவே!! ஆமென்.**

# 14

# தொடும்படி வேண்டினர்

அவர் (இயேசு) பெத்சாயிதா ஊருக்கு வந்தார்; அப்பொழுது ஒரு குருடனை அவரிடத்தில் கொண்டு வந்து, அவனைத் தொடும்படி அவரை வேண்டிக் கொண்டார்கள் (மாற் 8:22-25)

★ பின்பு அவர் பெத்சாயிதா ஊருக்கு வந்தார்; அப்பொழுது ஒரு குருடனை அவரிடத்தில் கொண்டுவந்து, அவனைத் தொடும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டார்கள். அவர் குருடனுடைய கையைப்பிடித்து, அவனைக் கிராமத்துக்கு வெளியே அழைத்துக் கொண்டுபோய், அவன் கண்களில் உமிழ்ந்து, அவன்மேல் கைகளை வைத்து: எதையாகிலும் காண்கிறாயா? என்று கேட்டார்.

★ அவன் ஏறிட்டுப் பார்த்து: நடக்கிற மனுஷரை மரங்களைப்போலக் காண்கிறேன் என்றான். பின்பு அவர் மறுபடியும் அவன் கண்களின்மேல் கைகளை வைத்து, அவனை ஏறிட்டுப் பார்க்கும் படி செய்தார்; அப்பொழுது அவன் சொஸ்தமடைந்து, யாவரையும் தெளிவாய்க் கண்டான்.

# ஜெபம்

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, என்னை உமது இரக்கமுள்ள கரங்களில் அர்ப்பணிக்கிறேன்! இயேசுவே, இருளடைந்த என் வாழ்வைத் தொட்டு வெளிச்சமாக்கும்படி ஜெபிக்கிறேன்! என் வாழ்வின் எல்லாப் பகுதியிலும் சமாதானத்தை இழந்து கண்ணீரோடும், வேதனையோடும் வாழும் என்னைத் தொட்டு ஆறுதலையும், சமாதானத்தையும் தந்தருளும்! இயேசுவே, என் சரீரத்தைத் தொட்டு குணமாக்கியருளும். சத்துருவின் வல்லமையினால் போராடிக்கொண்டிருக்கும்என்னை விடுதலையாக்கியருளும். பலவித பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கின்ற என்னை உமது கரத்தால் விடுவித்தருளும்! என்னிலிருக்கும் எல்லா இருளையும் நீக்கி பிரகாசமுள்ள மனக்கண்களை எனக்குக் கட்டளையிட்டருளும்! உம்மை தரிசிக்கிற கண்களாக என் கண்களை மாற்றியருளும்! உம்மை அறிகிற அறிவில் வளர்ந்து பெருகவும், அதினால் உண்டாகும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள கிருபை தந்தருளும்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! கிருபையுள்ள பிதாவே!! ஆமென்.**

# 15

# மனதுருகும் இயேசு

கர்த்தர் அவளைப் பார்த்து, அவள் மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி, கிட்டவந்து... வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார் (லூக் 7:11-17)

- ★ மறுநாளிலே அவர் நாயீன் என்னும் ஊருக்குப் போனார்; அவருடைய சீஷர் அநேகரும் திரளான ஜனங்களும் அவருடனே கூடப் போனார்கள்.
- ★ அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது, மரித்துப்போன ஒருவனை அடக்கம் பண்ணும்படி கொண்டுவந்தார்கள்; அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். அவளோ கைம்பெண்ணாயிருந்தாள்; ஊராரில் வெகு ஜனங்கள் அவளுடனே கூட வந்தார்கள்.
- ★ கர்த்தர் அவளைப் பார்த்து, அவள் மேல் மனதுருகி: அழாதே என்று சொல்லி,
- ★ கிட்டவந்து, பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர்:

வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்கிறேன் என்றார்.

- ★ மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத் தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்.

- ★ எல்லாரும் பயமடைந்து: மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும், தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார் என்றும் சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

- ★ இந்தச் செய்தி யூதேயா தேசமுழுவதிலும் சுற்றியிருக்கிற திசைகள் யாவற்றிலும் பிரசித்தமாயிற்று.

துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன்
தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில்
திரும்பக்கடவன்; அவர் அவன்மேல்
மனதுருகுவார் (ஏசா 55:7)

அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்
(I பேதுரு 3:24)

# ஜெபம்

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

மனதுருக்கத்தில் மகத்துவமுள்ள தேவனே, என்னை உமது கிருபையுள்ள கரங்களில் ஒப்பு வித்து ஜெபிக்கிறேன்! என் வாழ்வில் எல்லா ஆசீர் வாதங்களையும் இழந்து வெறுமையாயிருக்கும் என்மேல் தயவாய் மனமிரங்கும்! பிசாசின் கிரியை களினால் சமாதானத்தையும், நிம்மதியையும், அமைதியையும் இழந்து வேதனையோடு காணப் படும் என்மேல் உமது தயவுள்ள கரம் இரங்கட்டும் என்று சொல்லி ஜெபிக்கிறேன்! வியாதிகளால் சுகத்தை இழந்து பெலவீனத்தோடு இருக்கும் என் மேல் கிருபையாயிரும்! பலவிதமான பிரச்சினை களினால் பயத்தோடு வாழும் என்னை விடுவித் தருளும்! இயேசுவே, என் வாழ்வில் இழந்துபோன எல்லா ஆசீர்வாதத்தையும் திரும்ப தந்து என்னை உயர்த்தியருளும்! என் கண்ணீரை துடைத்து ஆறுதல்படுத்தியருளும்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! மகிமையுள்ள பிதாவே!! ஆமென்.**

# 16

# பெலவீனத்தினின்று விடுதலை

(இயேசு) அவள்மேல் தமது கைகளை வைத்தார்; உடனே அவள்நிமிர்ந்து, தேவனை மகிமைப் படுத்தினாள் (லூக் 13:10-13)

★ ஒரு ஓய்வுநாளில் அவர் ஜெபஆலயத்தில் போதகம்பண்ணிக்கொண்டிருந்தார்.

★ அப்பொழுது பதினெட்டு வருஷமாய்ப் பல வீனப்படுத்தும் ஆவியைக்கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக் கூடாத கூனியாயிருந்தாள்.

★ இயேசு அவளைக் கண்டு, தம்மிடத்தில் அழைத்து: ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலை யாக்கப்பட்டாய் என்று சொல்லி,

★ அவள்மேல் தமது கைகளை வைத்தார்; உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப்படுத்தினாள்.

(இயேசு) அவர்தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களை சுமந்தார் (மத் 8:17)

நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் (யாத் 15:26)

# ஜெபம்

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன், ஸ்தோத்திரிக்கிறேன்.**

தேவனே, என்னை உமது தயவுள்ள கரங்களில் ஒப்புவிக்கிறேன்! ஆண்டவரே. பலவித வியாதிகளால் மிகவும் சோர்வோடு காணப்படும் என்னை கண்ணோக்கிப் பாரும்! என் சரீரத்தில் சுகமில்லாமல் பெலவீனத்தோடிருக்கும் என்மேல் உம்முடைய தழும்புகளுள்ள கரங்கள் இரங்கட்டும் என்று சொல்லி ஜெபிக்கிறேன்! இயேசுவே, இதினிமித்தம் கண்ணீரோடும், வேதனையோடும், நிந்தையோடும், உபத்திரவத்தோடும் வாடிக் கொண்டிருக்கும் என் வாழ்க்கையில் ஒரு மகத்தான அற்புதத்தைச் செய்தருளும்! இயேசுவே, உமது தழும்புகளால் என்னைக் குணமாக்கி, வியாதியிலிருந்து விடுதலையைத் தந்தருளும்! உமது பெலத்தினால் என்னை இடைகட்டி சுகமாக்கியருளும்! என் கண்ணீரைத் துடைத்தருளும்! என்னைப் பெலப்படுத்தி ஆசீர்வதித்தருளும்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! நல்ல பிதாவே!! ஆமென்.**

# 17

# குணமாக்குகிற இயேசு

**இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார் (யோவா 4:46-53)**

★ பின்பு, இயேசு தாம் தண்ணீரைத் திராட்ச ரசமாக்கின கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு மறுபடியும் வந்தார்; அப்பொழுது கப்பர்நகூமிலே ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருந்தான்.

★ இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்தாரென்று அந்த மனுஷன் கேள்விப்பட்ட போது, அவரிடத்திற்குப்போய், தன் மகன் மரண அவஸ்தையாயிருந்தபடியினாலே, அவனைக் குணமாக்கும்படிக்கு வரவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான்.

★ அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்க மாட்டீர்கள் என்றார்.

★ அதற்கு ராஜாவின் மனுஷன்: ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதற்குமுன்னே வரவேண்டும் என்றான்.

★ இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார். அந்த மனுஷன், இயேசு சொன்ன வார்த்தையை நம்பிப்போனான்.

★ அவன் போகையில், அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிர்கொண்டுவந்து, உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறான் என்று அறிவித் தார்கள்.

★ அப்பொழுது: ஏந்த மணிநேரத்தில் அவனுக்குக் குணமுண்டாயிற்று என்று அவர்களிடத்தில் விசாரித்தான். அவர்கள்: நேற்று ஏழாம் மணி நேரத்தில் ஜுரம் அவனை விட்டது என்றார்கள்.

★ உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று இயேசு தன்னுடனே சொன்ன மணிநேரம் அதுவே என்று தகப்பன் அறிந்து, அவனும் அவன் வீட்டாரனை வரும் விசுவாசித்தார்கள்.

அவருடைய (இயேசுவினுடைய) தழும்புகளால் குணமானீர்கள் (I பேது 2:24)

# ஜெபம்

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன், ஸ்தோத்திரிக்கிறேன்.**

பரிகாரியாகிய என் தேவனே, என்னை உமது வல்லமையுள்ள கரங்களில் ஒப்புவித்து ஜெபிக்கிறேன்! வியாதிப்படுக்கையில் மரணத்தோடு போராடிக்கொண்டிருக்கிற என்மேல் தயவாய் மனமிரங்கும்! மருத்துவர்களால் கைவிடப்பட்டு மிகவும் கலங்கி கண்ணீரோடு, பயத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கும் எனக்கு உதவி செய்தருளும்! இயேசுவே, என்னை குணமாக்க உம்மால் ஆகும் என்று விசுவாசிக்கிறேன்! அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களை குணமாக்கி அழிவுக்கு தப்புவிக்கிறார் என்ற உம்முடைய வார்த்தையின்படி உமது வல்லமையுள்ள வசனத்தை என்மேல் அனுப்பி என்னை முற்றிலும் குணமாக்கியருளும்! உமது வார்த்தையைக் கொண்டு எனக்கு அற்புத சுகத்தைத் தந்தருளும்! என் ஜீவனை மீட்டுத் தந்து உமக்காக வாழ உதவியருளும்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! ஜீவனுள்ள பிதாவே!! ஆமென்.**

# 18

# உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்

நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார் (யோவா 9:1-9)

★ அவர் அப்புறம் போகையில் பிறவிக் குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார்.

★ அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள்.

★ இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்.

★ பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்;

ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது.

★ நான் உலகத்திலிருக்கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்.

★ இவைகளைச் சொல்லி, அவர் தரையிலே துப்பி, உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசி:

★ நீ போய், சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பி வந்தான்.

★ அப்பொழுது அயலகத்தாரும், அவன் குருடனா யிருக்கையில் அவனைக் கண்டிருந் தவர்களும்: இவன் உட்கார்ந்து பிச்சை கேட்டுக் கொண் டிருந்தவனல்லவா என்றார்கள்.

★ சிலர்: அவன்தான் என்றார்கள். வேறு சிலர்: அவனுடைய சாயலாயிருக்கிறான் என்றார்கள், அவனோ: நான்தான் அவன் என்றான்.

எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி (யோவா 1:9)

# ஜெபம்

**பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மைத் துதிக்கிறேன்! ஸ்தோத்திரிக்கிறேன்!!**

ஒளியாகிய என் தேவனே, என்னை உமது தயவுள்ள கரங்களில் அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்! பாவத்திலும், சாபத்திலும், அடிமைத்தனத்திலும் சிக்கி குருடாக்கப்பட்ட கண்களோடு தடுமாறி வாழ்ந்துகொண்டிருக்கும் என்மேல் கிருபையாய் மனமிரங்கும்! இயேசுவே, உமக்கு விரோதமாக நான் செய்த என்னுடைய எல்லாப் பாவங்களையும் மன்னித்து, சாபங்களை நீக்கியருளும்! உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளியே, இருள் நிறைந்த என் வாழ்வை வெளிச்சமாக்கி உலகத்திற்கு ஆசீர்வாதமாக மாற்றியருளும்! ஒளியாய் வந்தவரே, என்னிலுள்ள இருள் நீங்கும்படி செய்து உமது முகத்தின் ஒளியை என் மேல் பிரகாசிக்கப்பண்ணியருளும். பாவத்திலிருந்து பூரண விடுதலை தந்து என் வாழ்க்கையில் ஒளியை ஏற்றியருளும்!

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்! வல்லமையுள்ள பிதாவே!! ஆமென்.**

# விசேஷித்த ஜெபக்குறிப்புகள்

*லூக்கா 11:9*

★ ..........................................................................

★ ..........................................................................

★ ..........................................................................

★ ..........................................................................

★ ..........................................................................

★ ..........................................................................

★ ..........................................................................

★ ..........................................................................

★ ..........................................................................

★ ..........................................................................

★ ..........................................................................

★ ..........................................................................

★ ..........................................................................

★ ..........................................................................

★ ..........................................................................

# முழங்கால் யுத்தம்

ஜெபப்புத்தகங்கள் மற்றும் பிற வெளியீடுகள்

பற்றிய முழு விவரங்களை அறிந்துகொள்ள

அணுக வேண்டிய முகவரி...


**முழங்கால் யுத்தம்**

**46/AA, சாந்தி நகர் மேற்கு,**

**3-வது குறுக்குத்தெரு, ஓசூர்-635 109.**

**செல்: 70944 99959/69**

email: muzhangalyuttham100@gmail.com

muzhangalyutthambookministries@gmail.com

Muzhangal Yuttham

# PRARTHANAI NERAM



# Miracles of Prayer

தேசத்தின் மறுரூப பார்வை

ஜெபத்தினால் மறுரூபம்


**MUZHANGAL YUTTHAM**

INTERCESSORY PRAYER MINISTRIES

46/AA, SHANTHI NAGAR (WEST)

HOSUR - 635 109. Tel : 70 944 999 59 / 70 944 99

Email : muzhangalyutthambookministries@gmail.

muzhangalyuttham100@gmail.com